நாள்: 12.12.2024
OP.50/2023
பெயர். கீர்த்தனா
எ.ம.சா.1

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் M.Phil ஆங்கிலம் படித்துள்ளேன். என் கணவர் என்ன வழக்கை என்மீது தாக்கல் செய்துள்ளார், நான் அதற்கு என்ன பதில் தாக்கல் செய்துள்ளேன் என்பதை தெரிந்து கொண்டு தான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். 2021 மே மாதம் முதல் நாங்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். இந்த வழக்கு தாக்கல் செய்த பின்னர் நான் என் கணவர் மீது தேனி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் புகார் கொடு்த்தேன். அந்த புகார் மனு உத்தமபாளையம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வைத்து விசாரணை செய்யப்பட்டது. புகார் மனு நகலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எ.ம.சா.ஆ.1 ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டுள்ள சரத்துக்கள் சரியானதுதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.அதில் எனது பெற்றோர்கள் சாட்சிகளாக கையொப்பம் போட்டுள்ளார்கள். பேச்சுவார்த்தைக்கு வராததால் நான் புகார் கொடுத்தேன். நான் சேர்ந்து வாழ்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுத்தேனா என்றால் நான் சேர்ந்து வாழக்கோரி இந்த நீதிமன்றத்தில் HMOP.232/2024 தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு 23.01.2024 அன்று என் கணவர் நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக போடப்பட்டுள்ளது.